ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2292/41 - 2022 අගෝස්තු මස 10 වැනි බදාදා - 2022.08.10

2292/41 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 10 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## இலங்கை மத்திய வங்கி அறிவித்தல்கள்

***2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப்பண்டங்கள் அறவீட்டுச் சட்டம் 2 ஆம் மற்றும் 5 ஆம் பிரிவின் கீழான கட்டளை***

1. 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப்பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்ததாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைவாக, இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான் இக்கட்டளை மூலம் இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்படும் வியாபாரப்பண்ட இனம் தொடர்பில், அட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவீடுகளில் குறித்துரைக்கப்படும் வீதங்களில் விசேட வியாபாரப்பண்ட அறவீடொன்றை விதிக்கிறேன்.

**அட்டவணை**

| நிரல் I | | | | நிரல் II |
|---|---|---|---|---|
| வியாபாரப் பண்ட இனம் | | | | |
| | இ. மு. தலைப்பு | இ. மு. குறியீடு | விவரணம் | விசேட வியாபாரப்பண்ட அறவீடு |
| 1. | 03.05 | 0305.54.10 | நெத்தலிகள் | கிலோ கிராமிற்கு 100.00 ரூபா |
| 2. | | 0305.52.00<br>0305.53.00<br>0305.54.90<br>0305.59.30<br>0305.59.90 | உலர்த்திய மீன்கள் (கருவாடு) | கிலோ கிராமிற்கு 100.00 ரூபா |
| 3. | 09.10 | 0910.99.10 | வெந்தயம் | கிலோ கிராமிற்கு 50.00 ரூபா |

1A - PG 5928 — 481 (2022/08)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

| நிரல் I | | | | நிரல் II |
|---|---|---|---|---|
| வியாபாரப் பண்ட இனம் | | | | |
| | இ. மு. தலைப்பு | இ. மு. குறியீடு | விவரணம் | விசேட வியாபாரப்பண்ட அறவீடு |
| 4. | 11.02 | 1102.90.20 | குரக்கன் (எலியுசைன் குரக்கானா இன) மாவு | கிலோ கிராமிற்கு 150.00 ரூபா |
| 5. | 12.07 | 1207.50 | கடுகு விதைகள் | கிலோ கிராமிற்கு 62.00 ரூபா |
| 6. | 25.01 | 2501.00 | உப்பும் (மேசை உப்பும், இயல்பிழந்த உப்பும் உட்பட) தூய சோடியம் குளோரைட்டும், திரவக்கரைசலாக அல்லது சேர்க்கப்பட்ட தடிப்படைவதை எதிர்க்கும் காரணிகள் அல்லது இலகுவாக பாய்வதை ஊக்குவிக்கும் காரணிகள், சேர்க்கப்பட்டவை அல்லது இம் மூன்று நிலைகளிலும் இல்லாதது: கடல் நீர் | கிலோ கிராமிற்கு 40.00 ரூபா |

1. 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப்பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைவாக, மேலே உள்ள அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ள, எச். எஸ். தலைப்பு 2501.00 இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள எந்தவொரு மருந்து உற்பத்தியாக்கும் நிறுவனங்களாலும் மருந்துகள் உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தும் விடயத்திற்கு பொறுப்பாகவுள்ள இராஜாங்க அமைச்சின் செயலாளரின் பரிந்துரையின் பேரில், வர்த்தக நோக்கமல்லாது இறக்குமதி செய்யப்படும் உப்பின் (சோடியம் குளோரைட் வீ. பீ) மீதான பிரயோகிக்கக்கூடிய விசேட வியாபாரப்பண்ட அறவீடான கிலோ கிராமிற்கு ரூபா 40.00 இல் இருந்து கிலோ கிராமிற்கு ரூபா 10.00 அறவிடப்பட்ட பின்பு மிகுதிப் பெறுமதி கைவிடப்படல் வேண்டுமென இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.

2. 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப்பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் உப பிரிவு (3) இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக இக்கட்டளையானது 2022, ஓகத்து மாதம் 12 ஆந் திகதி முதல் ஆரம்பமாகும் ஒருவருட காலப்பகுதிக்கு செல்லுபடியுடையதாதல் வேண்டும்.

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சர்,
கொழும்பு 01,
2022, ஓகத்து 10.

EOG 08-0132